# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1865/25 - 2014 ජූනි මස 03 වැනි අඟහරුවාදා - 2014.06.03

*1865/25 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சபரகமுவ மாகாண, மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மாகாண சபையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் கட்டளைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (விளைவாந் தன்மை ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்*

சபரகமுவ மாகாண முதலமைச்சர், நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சூழல், செய்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய நான், சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் 1989 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கேற்ப எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை பிரதேச சபையின் தவிசாளர் திரு. பீ. பீ. விக்கிரமசிங்ஹ அவர்கள் மாவனல்லை பிரதேச சபையின் தவிசாளராக பணியாற்றும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக பரிசீலனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதி அலுவலர் ஒருவரான ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சமன் விக்கிரம விக்கிரமாரச்சி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

02. மேலும், சபரகமுவ மாகாண முதலமைச்சர், நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு,வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சூழல், செய்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய நான், சபரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் 1989 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை பிரதேச சபையின் தவிசாளராகிய திரு. பீ. பீ. விக்கிரமசிங்ஹ அவர்கள் குறித்த பிரதேச சபையின் தவிசாளர் பதவியில் பணியாற்றுதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

03. மேலும், 1989 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மாகாண சபையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் மாவனல்லை பிரதேச சபையின் தவிசாளர் பதவியில் பணியாற்றிய பீ. பீ. விக்கிரமசிங்ஹ அவர்கள் அப்பதவியில் பணியாற்றுதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதனால், அவரது அதிகாரங்களை செயற்படுத்துவதற்கும், பணிகளை நிறைவேற்றுவதற்கும், 1989 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மாகாண சபையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் கட்டளைச் சட்டத்தின் 3(அ)(1) ஆம் பிரிவு, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மை ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் கீழ் மாவனல்லை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் பதவியில் பணியாற்றும் திரு. மொஹமட் சாலி மொஹமட் காமெல் அவர்களுக்கு கட்டளையிடப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,
முதலமைச்சர், நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல்,
உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய, மகளிர் விவகார,
கூட்டுறவு,வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி,
சூழல், செய்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகள்
விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,
சபரகமுவ மாகாணம்.

சபரகமுவ மாகாண முதலமைச்சு,
புதிய நகரம், இரத்தினபுரி,
2014, யூன் 03.




இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.